**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.42/2024</u>**

பெயர்–திருமதி.நிர்மலா நாள்.05.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் எனது பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்தேன். வழக்கு சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமானது என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கு அரசால் எனது பெயருக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால், சரிதான். அரசால் பட்டா வழங்கப்படாமல், தாவா சொத்தில் வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று, வரி செலுத்தியுள்ளது அனைத்தும் தவறானது என்றால், சரிதான். ஊராட்சியில் கட்டிட அனுமதி பெற்றுதான் நான் வீடு கட்டியுள்ளேன். 17.02.2024–ம் தேதியன்று 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா இடத்தில் இடையூறு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். அக்கம் பக்கத்தினர் துணையுடன் தடுத்ததாக கூறியுள்ளேன், அவ்வாறு தடுத்த அக்கம் பக்கத்தினர் நபர்கள் பெயர் என்ன என்றால், முத்து, அவரது மனைவி மாது ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களை விசாரிக்க முடியுமா என்றால், விசாரிக்க முடியும். தாவா சொத்தில் இருந்து காலிசெய்யும் படி நோட்டீஸ் கொடுத்துள்ளார்களா என்றால், இல்லை. நான் தாவா சொத்தில் சட்டவிரோதமாக இருப்பதாக, பிரிவு–7 ன் படி எனக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை, அரசாங்கம் எடுத்துக்கொள்வது சரிதான். ஆனால், அதே பகுதியில் அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்து பல வீடுகள், கடைகள் உள்ளது. அவர்களை காலி செய்தால், நாங்களும் காலி செய்ய தயார். எனது கணவர் மேட்டூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றுகிறார். வழக்கு சொத்தில் நாங்கள் குடியிருப்பதால், அருகில் உள்ள பட்டதரசி அம்மன் கோவிலுக்கு செல்லும் தடத்தையும், நீர் வழிப்பாதையையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளோம் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து, இடையூறு செய்வதால், பொதுமக்கள் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி பஞ்சாயத்தில் புகார் செய்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால், இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.05 18:40:20 +0530

District Munsif